# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2233/17 - 2021 ජූනි මස 22 වැනි අඟහරුවාදා - 2021.06.22

*2233/17 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல: இல. ஸ்ரீ ஜயபுர/இஅ/74/ஆர்டீ iii (2020-11) மற்றும் 2020.07.31 ஆம் திகதி.
காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/6/2019/எச்டப்ளிவ்/122.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கொலொன்னாவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 513பீ, மாதின்னாகொடை கிராம அலுவலர் பிரிவில், கலபலுவாவ கிராமத்தில் அமைந்துள்ள, கொழும்பு மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் 2021.02.08 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைப்பட இல. கொ9937 இல் விபரிக்கப்பட்டுள்ள 1.3936 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட 1 தொடக்கம் 09 வரை உள்ள காணித்துண்டுகள் (09 துண்டுகள்) விபரங்கள்:-

*01.* **துண்டு இல.** *1*
காணியின் பெயர்: வரிப்பண இல. 327/5, மாதின்னாகொடை வீதி; காணி விபரம்: வீட்டுத்தோட்டம், 5 - 10 வயதுடைய தென்னை மரங்கள் 2 மற்றும் 30 - 35 வயதுடைய புளிய மரம் உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: இல. 151/1, டட்லி சேனாநாயக மாவத்தை, கொழும்பில் வசிக்கும் சில்வர் சர்கல் தனியார் நிறுவனம்(ஆ. வ. 4785 துண்டு (பகுதி) இல. எல் 3, சுவீகரித்தலுக்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0164 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல.** *2*
காணியின் பெயர்: வரிப்பண இல. 327/6, மாதின்னாகொடை வீதி; காணி விபரம்: வீட்டுத்தோட்டம், 30 வயதுடைய ஈரப்பலா மரம் உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: இல. 151/1, டட்லி சேனாநாயக மாவத்தை, கொழும்பில் வசிக்கும் சில்வர் சர்கல் தனியார் நிறுவனம்(ஆ. வ. 4785 துண்டு (பகுதி) இல. எல் 3, சுவீகரித்தலுக்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0034 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல.** *3*
காணியின் பெயர்: -; காணி விபரம்: கால்வாய்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியவில்லை (ஆ. வ. 4785 துண்டு (பகுதி) இல. எல் 3, சுவீகரித்தலுக்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0419 ஹெக்டயார்.

*04.* **துண்டு இல.** *4*
காணியின் பெயர்: -; காணி விபரம்: கால்வாய்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: - (புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையிலான மேம்பால அதிவேக வீதியை விஸ்தரிப்பதற்கு அவசியமாக உள்ளது, ஆ.வ.கொ 6548 துண்டு (பகுதி) இல. 25); விஸ்தீரணம்: 0.0008 ஹெக்டயார்.

*05.* **துண்டு இல.** *5*
காணியின் பெயர்: -; காணி விபரம்: மடை நிலம்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியவில்லை (ஆ. வ. 4785 துண்டு (பகுதி) இல. எல் 3,




*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

சுவீகரித்தலுக்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0218 ஹெக்டயார்.

06. **துண்டு இல. 6**
காணியின் பெயர்: -; காணி விபரம்: கால்வாய்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: - (புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையிலான மேம்பால அதிவேக வீதியை விஸ்தரிப்பதற்கு அவசியமாக உள்ளது, ஆ.வ.கொ 6548 துண்டு (பகுதி) இல. 2); விஸ்தீரணம்: 0.0027 ஹெக்டயார்.

07. **துண்டு இல. 7**
காணியின் பெயர்: மாதின்னாகொடை கும்புர அல்லது கெபெல்லகஹ கும்புர, கமத்வெடியே கும்புர; காணி விபரம்: மடை நிலம், கட்டப்பட்ட தியவன்னா நதி மற்றும் கட்டப்பட்ட கால்வாய்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: - (புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையிலான மேம்பால அதிவேக வீதியை விஸ்தரிப்பதற்கு அவசியமாக உள்ளது, ஆ. வ. கொ 6548 துண்டு (பகுதி) இல. 2, 3, 25); விஸ்தீரணம்: 1.2183 ஹெக்டயார்.

08. **துண்டு இல. 8**
காணியின் பெயர்: -; காணி விபரம்: கால்வாய்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: - (புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையிலான மேம்பால அதிவேக வீதியை விஸ்தரிப்பதற்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0266 ஹெக்டயார்.

09. **துண்டு இல. 9**
காணியின் பெயர்: தியவன்னா நதி; காணி விபரம்: கால்வாய்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: - (புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையிலான மேம்பால அதிவேக வீதியை விஸ்தரிப்பதற்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0617 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2021.08.23 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்டு கொலொன்னாவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021.08.17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
கொலொன்னாவ.

பிரதேச செயலகம்,
கொலொன்னாவ.

06-412

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் இல.: அத்/CB/12/UDA.

2001 மார்ச் மாதம் 28 ஆந் திகதி பிரசுரிக்கப்படட 1177/11 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் பகுதி III – காணி எனும் விடயத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 04 – 216 ஆம் இலக்க 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் சார்பாக.

அதன் மூலம் காட்டப்பட்ட காணித் துண்டிற்கு/ காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாகவோ அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாகவோ கொழும்பு பிரதேச செயலகத்தில் என் முன் தோன்றும்படி வழங்கப்பட்ட திகதி கீழ்வருமாறு திருத்தப்படுகின்றேன்.

மேலும், மேற்குறித்த காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021 ஆம் வருடம் யூலை மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ஆரம்ப வரைபட இல: 7483 இல்
துண்டு இல. : 01
உரித்து விசாரணையின் திகதி : 2021, யூலை மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு

நாலக்க இரத்நாயக்க,
பிரதேச செயலாளர்/காணி எடுத்தல்
உத்தியோகத்தர்,
கொழும்பு.

பிரதேச செயலாளர் அலுவலகத்தல்,
கொழும்பு,
2021, யூன் 21.

06 – 413

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.